**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 283/2021**

**PROSECUTION WITNESS NO.5**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : தங்கமணி | **Caste** | : |
| **Father's/Husband Name** | : கண்ணன் | **Religion** | : **Hindu** |
| **Village** | : **126,** மேலலங்கம் | **Calling** | : கூலிவேலை |
| **Taluk** | : தஞ்சாவூர் | **Age** | : **51/2024** |

**(Accused 1,2,3 absent. Petition U/s. 317(1) CrPC filed and allowed.)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of02.02.2024**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு** 3, **திருமதி. ர.நித்யா,** தட்டச்சர்

**<u>C.C.No. 283/2021 02.02.2024</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.58**

**முதல் விசாரணை:**

**1.**நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா. 1 மகேஷ் குமார் என்பவரை தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள 1வது சாட்சி கையெழுத்து என்னுடையது. (**பார்வை மகஜரிலுள்ள 1ம் சாட்சி கையெழுத்து மட்டும் அ.சா. ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) சுமார் 1 வருடத்திற்கு முன்பாக தேதி , மாதம் நினைவில்லை. மதியம் 12.00 மணியளவில் கோவில் திருவிழாவிற்கு அனுமதி கேட்பதற்காக மேற்கு காவல் நிலையம் சென்றபோது போலீஸசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து செய்தேன். நான் எதற்காக கையெழுத்து என்று தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. **அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது. சாட்சியை மேற்கு காவல் நிலைய தலைமை காவலர் 2821 திரு. திருநாவுக்கரசு அவர்கள், நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்தார்.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :

2.கடந்த 28.07.2021 ஆம் தேதி பகல் 15.00 மணியளவில் மேற்கு காவல் நிலைய போலீசார் கு.எண். 1429/2021 வழக்கு தொடர்பாக சீனிவாச புரம் செக்கடி

அருகே போலீசார் விசாரணை செய்துக் கொண்டிருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அப்போது நானும் ராமு என்பவரும் என்பவரும் சம்பவயிடத்திற்கு முன்பு நின்றுக் கொண்டிருந்தபோது போலீசார் எங்கள் முன்பாக சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும் ராமு என்பவரும் பார்வை மகஜரில் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகளுக்கு பயந்து எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.